T. 1374

உ

கடவுள் துணை

மண்டலபுருடன் அருளிச்செய்த

# சூடாமணி நிகண்டு

முதலாவது

## தெய்வப்பெயர்த் தொகுதி

சென்னை:

திருமகள்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1934.

கடவுள் துணை

# சூடாமணி நிகண்டு

## சிறப்புப்பாயிரம்

பொன்னுநன் மணியு முத்தும்
புனைந்தமுக் குடை நிழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல்
வீற்றிருந் தவனை வாழ்த்தி
மன்னிய நிகண்டு சூடா
மணியென வொன்று சொல்ல
னின்னிலந் தன்னின் மிக்கோர்
யாவரு மினிது கேண்மின். 1

பூமலி யசோகி னீழற்
பொலிந்தவெம் மடிகண் முன்னா
ளேயமா முகனூல் சொல்லக்
கணதர ரியன்ற பாவாற்
றொமொரு வழிநூல் சொல்லச்
சார்புநூல் பிறருஞ் சொல்லத்
தோமிலா மூன்று நூலுந்
துவமென வுதித்த வன்றே. 2

அங்கது போய பின்றை
யலகிலால் பிறந்த மற்றுஞ்
செங்கதிர் வரத்திற் றோன்றுந்
திவாகரர் சிறப்பின் மிக்க

பிங்கல ருரைநூற் பாவிற்
 பேணினர் செய்தார் சேர
லிங்கிவை யிரண்டுங் கற்க
 வெளுதல வென்று சூழ்ந்து.

சொல்லொடு பொருளு ணர்ந்தோன்
 சோதிட நீதி வல்லோ
னல்லறி வாள னெங்க
 ணறுங்குறை ஞான மூர்த்தி
பல்லுயிர்க் கொரு தாயாகும்
 பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க் கெல்லாம்
 வரையறத் தரையில் வந்து.

பரிதியொன் றுதயஞ் செய்து
 பங்கய மநேக கோடி
முருகெழ மலர்வித் தென்ன
 முகமுட னகம லர்த்தி
மருவுமுத் தமிழை முன்னாள்
 வளர்த்தபாண் டியனை போலக்
கருதிய வெல்லாந் தந்து
 கவிமணி மாலை சூடி.

செகமெனும் பளிங்கு மாடத்
 திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்ந்திப்
 பொலிவுறு போத் தாணி
மகிழ்குண பத்ர னெங்கள்
 வழித்தெய்வம் போல்வான் சொல்ல
விகபர மிரண்டும் வேண்டி
 யியலிசை வல்லோர் கேட்ப.

விரவிய தேவர் மக்கள்
விலங்கொடு மரமி டம்பல்
பொருள்செயும் வடிவு பண்பு
போற்றிய செயலொ லிப்பே
ரொருசொற்பல் பொருளி னோடு
முறைத்தபல் பெயர்க்கூட் டந்தான்
வருமுறை திவா கரம்போல்
வைத்துப்பிங் கலந்தை தன்னில். 7

ஒருங்குள பொருளு மோர்ந்திட்
டுரைத்தனன் விருத்தந் தன்னி
லிருந்தவை நல்லோர் குற்ற
மியம்பிடா ரெம்ப தெண்ணித்
திருந்திய கமல வூர்தி
திருப்புகழ் புராணஞ் செய்தோன்
பரந்தசீர் குணபத் திரன்றாள்
பணிந்தமண் டலவன் றானே. 8

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

கடவுள் துணை

# சூடாமணி நிகண்டு

## முதலாவது தெய்வப்பெயர்த்தொகுதி

### அருகன் பெயர்

அநகனெண் குணபரிச் சிந்த
னறவாழி வேந்தன் வாமன்
சினன்வா னுருவன் சாந்தன்
சிநேந்திர னீதி நூலின்
முனைவன்மா சேனன் றேவன்
மூவுழ குணர்ந்த மூர்த்தி
புனிதனென் றோன்வி ராகன்
பூமிசை நடந்தோன் போதன். 1

பண்ணலன் கமல வூர்தி
பரமேட்டி காதி வென்றோன்
புண்ணியன் புலவன் புத்தன்
பூரணன் பொன்னெ யிற்கோன்
விண்ணவன் விமலன் வீரன்
விநாயகன் வீத சோக
னண்ணலவின் மதனை வென்றோ
னருட்கொடி வேந்த னீசான். 2
முத்தன்மா முனிக ருத்தன்
முக்குடைச் செல்வன் முன்னோன்
சித்தனெண் சிறப்பு முள்ளோன்
றிகம்பரன் கொல்லா வேத

ணித்தனின் மலனின் ஞம
 னிராயுத னேமி நாத
னத்தனு னந்தன் சோதி
 யரியணைச் செல்வ னுதி. 3

ஆத்தன்குற் றங்க ளில்லா
 னசோகமர் கடவு ளாதன்
சாத்தன்வே தாந்த னுதன்
 சமியனு மயன்ச யம்பு
நீத்தவன் பிதாவி தாதா
 நிரம்பர னனந்த ஞானி
தீர்த்ததன்மால் பகவன் சாமி
 சீபதி சீமான் செய்யோன். 4

நிருமலன் வரதன் சாது
 நிரஞ்சனன் விறலோன் யோகி
தருமரா சன்யு காதி
 சதுர்முகன் சாத ரூபி
திருமறு மார்ப னீடு
 சிவகதிக் கிறை தொண்ணூறே
யருகன்பே ராகு மற்று
 மபிதான மனந்த மாமே. 5

அரன் பெயர்

சங்கா னிறையோன் சம்பு
 சதாசிவன் பேயோ டாடி
பொங்கா வணிந்த மூர்த்தி
 புராந்தகன் பூத நாதன்
கங்கைவே ணியன் கங்காளன்
 கடுக்கையங் கண்ணி சூடி

மங்கையோர் பாகன் முன்னோன்
மகேச்சுரன் வாம தேவன் 6

நீலகண் டன்மா தேவ
னிருமலன் குன்ற வில்லி
சூலபா ணியனீ சானன்
பசுபதி சுடலை யாண்டி
காலகா லன்க பாலி
யுருத்திரன் கைலை யாளி
யாலமர் கடவு ணித்த
னைம்முகன் பாசு பாணி. 7

அந்திவண் ணன்முக் கண்ண
னழலாடி பாண்ட ரங்கன்
சந்த்ரசே கரனா னந்தன்
சடைமுடி யனந்த னாதி
தந்தியீ ருரியோ னம்பன்
றற்பர னீற ணிந்தோ
னந்தியீச் சுரனே றூர்ந்தோ
னக்கன்மா ஞான மூர்த்தி. 8

வரன்மறை முதலி யோகி
மானிட மேந்தி சோதி
பிரமன்மாற் கரியோன் றாணு
பிஞ்ஞகன் பினாக பாணி
பரமனெண் டோளன் கூற்றைப்
பதைத்திட வுதைத்த பாத
னரனது நாம மாறைந்
திரட்டியா மனந்த மற்றும். 9

பலதேவன் பெயர்

இலகுமோர் குண்டல லன்மற்
றிரேவதி கொண்கன் முற்று
நிலவிய முசலி வெள்ளை
நீலவம் பான நந்த
னலமுறு படையாக் கொண்டோ
னச்சுதன் முன்னர் வந்தோன்
பலபத்ரன் காம பாலன்
பரந்தாமன் பலதே வன்பேர். 10

அரியின் பெயர்

மாதவன் மாயன் செய்ய
வாமனன் வாசு தேவன்
சீதர னந்த கோபன்
றிருமக ளுவண மேற்ற
கேதனன் பதும நாபன்
கேசவன் பஞ்ச வற்குத்
தூதனே சாரங்க பாணி
சுரிமுகச் சங்க மேந்தி. 11

கொண்டல்வண் ணன்கா குத்தன்
கோவிந்த னச்சு தன்மால்
விண்டுவே லையிற் றுயின்றோன்
விரகினு லுந்தி பூத்தோன்
வண்டுழாய் மௌலி யாதி
வராகன்வை குந்த நாதன்
முண்டகா சனைகேள் வன்றா
மோதரன் முராரி நேமி. 12

வல்லன்றே வகிதன் மைந்தன்
வனமாலி படியி டந்தோன்

சலசலோ சனன நந்த
சயனன்பீ தாம் பரன்பே
ருலகளந் தருள்வோன் பஞ்சா
யுதனுல குண்ட பெம்மா
னலகைதன் முலையோ டாவி
யருந்தினோ னரசிங்கன். 13

அரவணைச் செல்வன் கண்ண
னறிதுயி லமர்ந்த மூர்த்தி
பிரமனைப் பெற்ற தாதை
பின்னைகேள் வன்மு குந்தன்
கரியவ னெடியோன் காவற்
கடவுளு ரணனே மேழே
யரியின்பே ராகு மற்று
மபிதான மனந்த மாமே. 14

பிரமன் பெயர்

பிரமன்மே தினிப டைத்தோன்
பிதாமகன் பிதாவி தாதா
வரனயன் மலரோ னிந்த
மண்பொதுத் தந்தை வேத
னிரணிய கருப்பன் போத
னினியமா லுந்தி வந்தோன்
குரவனே திமமு யர்த்த
கொடியின னன்ன வூர்தி. 15

இறைசதா நந்த னீண்ட
வெண்கணன் விதிச யம்பு
மறையவ னனந்தன் ஞானி
மான்மகன் வாணி கேள்வன்

முறைதெரி பகவன் வானோர்
முதுவனான் முகஞ்விரிஞ்ச
னறைமலி கமல யோனி
நாமமா றைந்து மாமே. 16

புத்தன் பெயர்

தருமரா சன்மு னீந்திரன்
சினன் பஞ்ச தாரைவிட்டே
யருள்சுரந் தவுணர்க் கூட்டுந்
ததாகத னாதி தேவன்
விரவுசாக் கியனே சாந்தன்
விநாயகன் சினந்த விர்ந்தோ
னரசநீ ழலிலி ருந்தோ
னறிவரன் பகவன் செல்வன். 17

அண்ணலே மாயா தேவி
சுதனக ளங்க மூர்த்தி
நண்ணிய கலைகட் கெல்லா
நாதன் முக்குற்ற மில்லோ
னெண்ணில்கண் ணுடையோன் வாம
னேற்றபுண் ணியத்தின் மூர்த்தி
யுண்ணிய முதல்வன் சாந்தன்
பூமிசை நடந்தோன் புத்தன். 18

இந்திரன் பெயர்.

மேகவா கனன்வேள் விக்கு
வேந்தன்விண் புழுது மாளி
பாகசா தனனே வச்ர
பாணிகோ பதிசி றப்பா
காகநீ ணவர்க்கு நாத
னமருப் பியானை யூர்தி

போகிவா சவனே வேந்தன்
புரந்தான் புலவன் சக்ரன். 19

மருதநன் நிலத்து வேந்தன்
மருத்துவன் வானோர் கோமான்
புருகூதன் சசிம ணாளன்
புரோகிதன் கௌசி கன்னே
கரியவன் சுனாசீ ரனாு
கண்டல னுடனா வலாரி
யரிசதக் கிருது நீண்ட
வாயிரங் கண்ண னிந்திரன். 20

## விநாயகன் பெயர்

அங்குச பாச மேந்தி
யம்பிகை தநயன் முன்னோ
னைங்கரன் மூத்தோ னொற்றை
யணிமருப் பின்னோ னம்பன்
கங்கைபெற் றோன்முக் கண்ணன்
கணபதி யீசன் மைந்தன்
வெங்கய முகனே யாகு
வாகனன் விநாயகன் பேர். 21

## வீரபத்திரன் பெயர்

உக்கிர னழற்கண் வந்தோ
னுமைமகன் சிப்பு ளானோன்
முக்கணன் சடையோன் யானை
முகவனுக் கிளையோன் வில்லி
செக்கர்வா னிறத்தன் குரோதன்
சிறுவிதி மகஞ்சி தைத்தோன்
மிக்கபத் திரைக்குக் கேள்வன்
வீரபத் திரன்பே ராமே. 22

### கந்தன் பெயர்

முருகன்வேள் சுவாமி யாறு
முகன் குகன் குழகன் மாயோன்
மருகன்சேய் கார்த்தி கேயன்
வரைபக வெறிந்தோன் செட்டி
பரன்மகன் கங்கை மைந்த
னண்டலைக் கொடியு யர்த்தோன்
சரவண பவன்க டம்பன்
றாருகற் செற்றோ னீசான். 23

வெய்ந்தபூங் குறிஞ்சி வேந்தன்
வேளினுக் கிறைவி சாகன்
சேந்தன்சாங் கேயன் செவ்வேள்
சிலம்பன்மா மஞ்ஞை யூர்தி
வாய்ந்தசூர்ப் பகைவன் வள்ளி
மணவாளன் றெய்வ யானை
காந்தனே குமரன் கந்தன்
கலையுணர் புலவ னும்பேர். 24

### காமன் பெயர்

திருமகன் மைந்தன் மாரன்
சித்தசன் சம்ப ராரி
யுருவிலி மன்ம தன்மீ
னுறுகொடி யுயர்த்த தோன்ற
லிரதிகா தலன்வ சந்த
னெழில்பெறு வேனி லாளி
கருதிய கருப்பு வில்லி
கந்தர்ப்பன் மதன்பூ வாளி. 25

திங்கள்வெண் குடையோன் றென்றற்
றேரினன் வில்லி மோக

ஐங்கணைக் கிழவ னெய்பு
மலர்க்கணை வேள னங்கன்
செங்கண்மான் மைந்தன் மிக்க
திறன்மனோ பவன்ம னோச
னங்கசன் மனோபு வேணீ
ராழிவெம் முரசோன் காமன். 26

வைரவன் பெயர்

முத்தனைக் குமரன் பிள்ளை
முடுவல்வெம் படையோன் காரி
சித்தனே க்ஷேத் திரபா லனனே
செந்நிறத்தாடைக் குரிய கோமான்
வித்தகன் ஞாளி யூர்தி
விறற்கருங் குதிரை யாளி
வைத்தசீர் வடுக னின்ன
வைரவ னாம மாமே. 27

ஐயனார் பெயர்

காரியே புறத்த வன்பூங்
கடல்வண்ண னெடிய சாத்தன்
பூரணை கேள்வன் யோகி
புட்கலை தன்ம ணாள
னொருமா சாத்தன் செண்டா
யுதன்வெள்ளை யானை யூர்தி
யாரிய னறத்தைக் காப்போ
னரிகர குமர னையன். 28

குபேரன் பெயர்

அரனுடைத் தோழ னேகிங்
கரர்பிரா னளகையாளி

பீருடவர் கனனே செய்ய
புட்பக விமான முள்ளோ
னிருநிதிக் கிழவன் மந்திரி
பிங்கல னிப்பக்கர் கோமான்
மரகதன் றனதன் மற்றை
வச்சிர வணன்கு பேரன். 29

யமனுக்கும் காலனுக்கும் பெயர்

சமன்செங்கோற் கடவுள் கூற்றுத்
தருமனந் தகனே சண்ட
னமன்வைவச் சுதனே மற்றை
நடுவனே தென்றிசைக் கோன்
யமனரி மறலி யேமற்
றெருமையூர் தியுமா யிப்பாற்
கமையில்கான் மறன்ம டங்கல்
காலன்பா சத்த னும்பேர். 30

தருமதேவதையின் பெயர்

மரகத வல்லி பூக
பாநிழ லுற்ற வஞ்சி
பாமசுந் தரியி யக்கி
பகவதி யய்பை யெங்க
ளருகனை முடித ரித்தா
ளம்பிகை யறத்தின் செல்வி
தருமதே வதைபே ரம்பா
விகையென் றுஞ் சாற்ற லாமே. 31

உமையின் பெயர்

அரனிடத் தவள்கா மக்கோட்
டத்தியம் பிகையே மாதா

தருமத்தின் செல்வி தேவி
சாம்பவி மலைம டந்தை
பரசிவை கவுரி முக்கட்
பார்ப்பதி யொடுப வானி
யுமைகெழு சத்தி நாரி
யுமைபெயர் மூவைந் தாமே. 32

கங்கைக்கும் காடுகளுக்கும் பெயர்

வரநதி நீடு மந்தா
கினிதிரி பதகை மற்றைச்
சுரநதி கங்கை பேர்சா
நவிபகி ரதியுஞ் சொல்லும்
பெருகுமூ தணங்கு மோடி
பேசிய கொற்றி சூரி
மருவிய வடுகி மாரி
வடுகன்றாய் காடு காள்பேர். 33

திருமகள் பெயர்

மாக்கடற் பிறந்த கோதை
மாவரிப் பிரியை செய்யா
ளாக்கம்பொன் பொறிசீ தேவி
யலர்மகள் பொருளின் செல்வி
தாக்கணங் கிளையாள் பூமி
யிலக்குமி சலசை செல்வந்
தேக்குமிந் திரையீ ரெட்டுந்
திருமக ளும மாமே. 34

நாமகள் பெயர்

கலைமகள் பனுவ லாட்டி
காயத்ரி ஞான மூர்த்தி

யுலகமா தாயி ராயி
    யொள்ளிய வெள்ளை மெய்யா
ளிலகுவெண் கலச முற்றாள்
    பாரதி யிசை மடந்தை
மலரயன் மனைவி வாக்காள்
    வாணிநா மகள்பே ராமே. 35

## மூதேவியின் பெயர்

சேட்டையிந் திரைக்கு மூத்தாள்
    சீர்கேடி சிறப்பி லாதாள்
நீட்டிய வேக வேணி
    நெடுங்காகத் துவச முற்றாள்
கேட்டையே கெடல ணங்கு
    கழுதைவா கனிகே டெல்லா
மூட்டிய கலதி தவ்வை
    முகடிமூ தேவி யாமே. 36

## இந்திராணி, இந்திரன் மைந்தன், அமரர்மாதர் இவர்கட்கும், தெய்வமாதர் பொதுவிற்கும் பெயர்

பொருவிலிந் திராணி செய்ய
    புலோமசை சசிபே ரின்பந்
தருமயி ராணி யிந்திரன்
    மனைவிபேர் சயந்தன் மைந்த
னரமக ளரம்பை யென்ப
    வமரர்தம் மாதர் பேரே
விரவுசூ ரணங்கு தெய்வ
    மெல்லியர் பொதுப்பேர் சொல்லும். 37

காளி, இடாகினி, காளியேவல்செய் மகளிர் இவர்களின் பெயர்

சூரிமா வினியெண் டோளி
சூலிசண் டிகையே தேவி
வீரிமா தரிகங் காளி
வேதாளி யுமைமா தங்கி
தாருகற் பெற்ற தையல்
பைரவி சிவைசா முண்டி
யாரணி வல்ல ணங்கோ
டையயா மலைமுக் கண்ணி. 38

அலகைவெங் கொடியு யர்த்தாண்
மதுப்தி யாளி யூர்தி
யுலவிய மாயை யுற்ற
யோகினி காளி நாமம்
வலவைசூர் மகிட னோடு
மாயவ ளிடாகி னிப்பே
ரிலகுசங் கினிவஞ் சப்பெண்
காளிதன் னேவல் செய்வோர். 39

துர்க்கையின் பெயர்

அமரியெண் டோளி வெற்றி
யந்தரி யம்ப ணத்தி
சமரிபா லைக்கி ழத்தி
சயமகள் வீரச் செல்வி
குமரிமா மகிடற் செற்றாள்
கொற்றவை சக்ர பாணி
விமலைவண் கலையா கத்தி
விசையைநா ரணியே விந்தை. 40

நீலியே நெடிய காத்தி
யாயனி மேதிச் சென்னி
மேலிட ருற மிதித்த
மெல்லியல் கௌரி யையை
மாலினுக் கிளைய நங்கை
பகவதி வாள்கைக் கொண்டாள்
சூலிசண் டிகையே கன்னி
சுந்தரி துர்க்கை நாமம். 41

## தேவர் பெயர்

அமரர்பண் ணவர்புத் தேளிர்
கடவுள ரண்ட ரும்ப
ரிமையவர் விபுதர் வானோ
ரிலேகரே புலவர் விண்ணோ
ரமுதரா றித்தர் மேலோ
ரையரே சுரரே தீர்த்த
ருமிழ்சுடர் மௌலி சூட்டு
முயர்நிலத் தவருந் தேவர் 42

## தெய்வத்திற்கும் அசுரர்க்கும் பெயர்

சாமி லணங்கு புத்தே
ளேற்றருற் கடவு டேவே
யான்தெய் வலமே தெய்வ
மரனென வுரைப்பர் நூலோர்
தானவ ரவுண ரோடு
தைத்தியர் திதியின் மைந்த
ரேனைய வசுர ராகு
நிசாசர ரென்று மேற்கும். 43

### இராக்கதர், விஞ்ஞையர், கந்தருவர்களின் பெயர்

நிருதரே பிசித வூணர்
நிசாசர ராக்கர் தீமை
தருமிராக் கதர்பேர் சால
கடங்கடர் தானு மாகும்
விரவுவிஞ் சையர்பேர் வித்தியா
தரரேகே சரரு மாங்கந்
தருவர்யாழ் வல்லோ ரேகாந்
தருவர்கிந் நரரு மாமே. 44

### பூதத்திற்கும் பேய்க்கும் பெயர்

குறள்கிருத் திமமே கூளி
பாரிடஞ் சாதகஞ் செந்
நெறியில்பூ தப்பே ரைந்தா
நீள்பிரே தம்வே தாளம்
வெறிமயல் பிசாசு பாசம்
வியந்தர மண்ணை சோகோ
டறிவழி கழுது கூளி
யலகைபேய் கடிசா வும்பேர். 45

### ஆகாயத்தின் பெயர்

அண்டம்வா னுலகு மங்கு
லந்தர மம்ப ரங்கோ
குண்டலங் ககனங் காயங்
குடிலம்புட் கரம நந்தம்
கண்டிடா வெளியே மீமா
கத்தொடா சினிந பங்கம்
விண்டலம் விசும்பு வேணி
வியோமமா காய மாமே. 46

### காற்றின் பெயர்

வாதங்கால் வளிம ருந்து
வாடையே பவநம் வாயு
கூதிர்மா ருதமால் கோதை
கொண்டலே யுலவை கோடை
யூதைவங் கூழ்சி றந்த
வொளிசதா கதியு யிர்ப்புக்
காதரி கந்த வாகன்
பிரபஞ்சநன் சலநன் காற்றே. 47

### மேற்காற்று, கீழ்காற்று, வடகாற்று, பனிக்காற்று, சுழல்காற்று இவற்றின் பெயர்

கோடைமேல் காற்றி னுமங்
கொண்டல்கீழ் காற்றிற் கேற்கும்
வாடையி னுமம் வீசும்
வடகாற்று வடந்தை யென்ப
கூடிய கூதி ருதை
குளிர்பனிக் காற்றி னுமஞ்
சாடிய சுழல்காற் றின்பேர்
சாரிகை சூறை யாமே. 48

### தென்றற்கும், நெருப்பிற்கும் பெயர்

வருதென்கால் சிறுகா றென்றி
மலயக்கால் வசந்தன் றென்ற
லரிவசுத் தகந னங்கி
யனலழ் வாக னன்றி
யெரிசுசி சிகியே யாா
லியங்குகாற் றின்ச காயன்

கருநெறி கனலி யேயங்
காரகன் சித்திர பானு. 49

தழலுதா சனன் சிறந்த
தனஞ்சயன் சாத வேதாச்
செழுன்மய முளரி தென்கீழ்த்
திசையிறை சேர்ந்தார்க் கொல்லி
யெழுமித நாவே வன்னி
யேற்றபா வகனே தேயு
வழல்சுடர் ஞெகிழி யின்ன
நெருப்பின்பே ராறைந் தாமே. 50

ஊழித்தீ, கனலொழுங்கு, விண்வீழ்கொள்ளி, நறும்புகை இவற்றின் பெயர்

வடவைதீத் திரண்ம டங்கல்
வருவட வாமு கஞ்சூழ்
கடையன வூழித் தீயாங்
கனலொழுங் கதுசு வாலை
யடைவிலவிண் வீழுங் கொள்ளி
யுற்கையென் றறைய லாமே
வேடிநறை குய்யிம் மூன்று
மிகுநறும் புகையி னமம். 51

காட்டழல், தீயைத்தருகோல், விளக்கு, புகை, தீப்பொறி, இவற்றிற்கும், தீத்தெய்வத்திற்கும், தீத்தெய்வத்தின் பாரிக்கும் பெயர்

தாவங்காட் டழலத் தீயைத்
தருகோலே ஞெலிகோ லென்ப
தீவிகை தீப மற்றைத்
திகழ்சுட ரொளிவி ளக்கே

யாவிதூ பந்தூ மத்தோ
டறிபுகை பொறிபு லிங்கம்
பாவக னத்தீத் தெய்வம்
பாரியே சுவாகா தேவி. 52

நீர், வெள்ளம், வருணன் இவற்றின் பெயர்

வாரியா லக்கீ லால
மழையலர் கமலங் காண்ட
நீரம்புட் கரமே சிந்து
நெடும்புனல் சலிலம் பாணி
காரறல் புவன நாரங்
கனவிர தங்க வந்த
மாரியம் புநமே யப்பு
வருணஞ்சீ வனம்வ நம்வார். 53

பயமழை யுதகந் தோயம்
பயசுகம் பரம்பா நீய
மயமள கத்தோ டாம
மமுதங்கஞ் சலநீ ராகும்
வியனுறு நீத்தம் வாரி
பிரளயம் வெள்ளத் தின்பேர்
நயனுரு வருண னிந்த
னற்புனல் வேந்த நாமம். 54

சூரியன், பரிதியின் வட்டம், கிரணம்
இவற்றின் பெயர்

பரிதிபாற் கானு தித்தன்
பனிப்பகைச் சுடர்ப தங்க
னிருள்வலி சவிதாச் சூர
னெல்லுமார்த் தாண்ட னென்றா

முருணனு தவனே மித்திர
 னுயிரஞ் சோதி யுள்ளோன்
றரணிசெங் கதிரோன் சண்டன்
 றபனனே யொளியே சான்றேன். 55

அனலியே யரியே பானு
 வலரியே யண்ட யோனி
சுனலினா யிறுவி காத்தன்
 கதிரவன் பகலோன் வெய்யோன்
றினகரன் பகலே சோதி
 திவாகர னரிய மாவே
யினனுட னுதயன் மற்றை
 யெல்லையே கிரண மாலி. 56

விரவுமேற் பரியோன் வேந்தன்
 விருச்சிகன் விரோச னன்பே
ரிரவிவிண் மணிய ருக்க
 னேழுஞ் சூரியன் பேர்
பரிதியின் வட்டந் தானே
 விசயமாம் பரிதி வீசுங்
கிரணமே காமு மற்றைக்
 கிளர்ந்தழீ விரமு மாகும். 57

சந்திரன் பெயர்

நிலவுசோ மன்க ளங்க
 நிசாபதி பிறைகு ளிர்ந்த
கலையின னுடுவின் வேந்தன்
 கலாநிதி யொடுகு பேர
னலவனே சசியே திங்க
 ளம்புலி நிசாக ரன்வா

னாலவிம கிரணன் சாந்த
முற்றதண் ணவன் குராங்கி. 58

மதியிராக் கதிரே யிந்து
மருவுதா னவனே யல்லோன்
விதுவொடு குமுத நண்பன்
சுதாகரன் வேந்த னாலோன்
சிதைவிலா முயலின் கூடு
பசுங்கதிர்த் தேவன் றெல்லாம்
புதியசந் திரன்மூ வேழு
மெட்டுமே புகன்ற நாமம். 59

செவ்வாயின் பெயர்

கருதிய செந்தீ வண்ணன்
காட்டுமங் கார கன்சேய்
குருதிவக் கிரனே பௌமன்
குசனில மான ரத்தன்
மருவிய வழலோன் மற்றை
மங்கல னுடனே யாரல்
விரவிய வதிர னின்ன
மேவுசெவ் வாயி னாமம். 60

புதன் பெயர்

சிந்தைகூ ரியன்க ணக்கன்
றேர்ப்பாக னருணன் சாமன்
வந்தது துவனே மாலே
மதிமக னறிஞன் பாக
னந்தமாம் புலவன் மற்றை
யனுவழி மேதை பச்சை
புந்திபண் டிதனீ ரெட்டும்
புதன்பெய ராகு மன்றே. 61

### வியாழத்திற்கும் வெள்ளிக்கும்பெயர்

தீதிலாத் தெய்வ மந்திரி
சிகண்டிச னமைச்சன் சீவன்
வேதனுண் டளப்பா னுசான்
வேந்தன்பொன் வியாழத் தின்பே
ரோதிய வசுர மந்திரி
யுகநன்பார்க் கவமீன சுங்கன்
கோதில்சுக் கிரன்ப லிங்கு
புகர்கவி மழைக்கோள் வெள்ளி. 62

### சனி, இராகு, கேதுக்களின் பெயர்

கதிர்மகன் மந்தன் காரி
கரியவன் கௌரி மேற்கோண்
முதுமகன் பங்கு நீலன்
முடவனோய் முகன்ச னிப்பேர்
மதியுணு மிராகு நாம
மற்றது தமங் கறுப்பா
மதிகமாங் கேதுச் செம்மை
சிகிகதிர்ப் பகையு மாமே. 63

### மேடம், இடபம்,
### மிதுனம், கர்க்கடகங்களுக்கும் பெயர்

கொண்டமை வருடை யாடு
கொறிமறி மேட மென்ப
குண்டைசே மூரி புல்லங்
கோவிடை யிடப மாகும்
தண்டியாழ் விழவி ரட்டை
சயமகன் மிதுனந் தாமே
நண்டுஞெண் டலவன் சேக்கை
நள்ளிகர் கடக மாமே. 64

சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம்
இவற்றின் பெயர்

கொலையரி யாளி மாவே
கொடும்புலி சிங்க மென்ப
முலைமடந் தையர்பே ரெல்லா
மொழிந்திடுங் கன்னி தானே
துலைநிறை நிறுப்பான் சீர்கோ
றாக்குவா ணிகன்று லாப்பே
ருலைவுறு தெறுக்கா றேளே
யோதிய விருச்சி கப்பேர். 65

தநுசு, மகரம், கும்பம், மீனம் இவற்றின் பெயர்

கொடுமரந் துரோணஞ் சாபங்
கொடுஞ்சிலை தநுநாற் பேரே
வடுவின்மான் கலைசு றாவே
மகரரா சிக்கு முப்பேர்
குடமொடு சரீரஞ் சாடி
குடங்கரே கும்ப மென்ப
நெடியமீன் மயிலை மச்சஞ்
சலசர நேரு மீனம். 66

அச்சுவினிக்கும், பரணிக்கும் பெயர்

பரிமருத் துவனாள் .வாசி
பரவுமைப் பசியா ழேறு
டிரலையே முதனாள் சென்னி
யென்பதச் சுவினி யின்பேர்
பரணியே கிழவன் சோறு
பகல்வன் றராசு தாழி
தருமனா ளடுப்புப் பூதந்
தாசிமுக் கூட்டுத் தானே. 67

கார்த்திகைக்கும், உரோகிணிக்கும் பெயர்

எரியிறந் திடுநா ளார
விருலறு வாய ளக்கர்
கருதுநா விதனே யங்கி
கார்த்திகை யளகு மேற்கும்
பிரமனுள் சகடு பண்டி
பேசிய சதியே வைய
முருள்விமா நந்தே ரூற்று
லுரோணியே யுரோகிணிப் பேர். 68

மிருகசீரிடத்திற்கும், ஆதிரைக்கும் பெயர்

திங்களுண் மதிபே ராளன்
சேர்ந்தமான் றலையே மாழ்கு
பொங்குமார் கழியே மும்மீன்
புகழ்நரிப் புரமே பாலை
யிங்கிவை யொன்ப தென்ப
மிருகசீ ரிடத்தி னுடஞ்
செங்கைமூ திரையா மீசன்
றினமிவை யாதி ரைப்பேர். 69

புனர்பூசம், பூசம். ஆயிலியம் இவற்றின் பெயர்

கருதிய வதிதி நாளே
கழைபுனர் தங்க ரும்பு
பொருவிலாப் புனிதம் பிண்டி
யாவணம் புனர்பூ சப்பேர்
குருவினுள் கொடிறு வண்டு
குறித்தகாற் குளமே பூச
மாவினுள் கௌவை பாம்பே
யாயிலா யிலிய நாற்பேர். 70

மகத்திற்கும், பூரத்திற்கும் பெயர்

கொடுநுகம் வேள்வி வாய்க்கால்
குறித்தவேட் டுவனே மாசி
வடுவற முதலிற் றோன்றி
வருஞ்சனி மகநா ளென்ப
விடையெழுஞ் சனியே துர்க்கை
யெலிபக வதினு ளோடு
கடியநா விதனை யெய்யுங்
கணையிரு முப்பேர் பூரம். 71

உத்திரத்திற்கும், அத்தத்திற்கும் பெயர்

பங்குனி கடையில் வந்து
பற்றிய சனியி னோடு
செங்கதிர் பிறந்த நாளுஞ்
சிறந்தவுத் திரமென் றாகும்
தங்குகா மாமே யங்கி
சார்ந்தநாள் கவுந்து வத்தோ
டங்கைமீன் களிறு நவ்வி
யைவிர லத்த மேழ்பேர். 72

சித்திரைக்கும், சுவாதிக்கும் பெயர்

அளக்குநெய் பயறு மீனே
யறுவையே யாடை தூசு
துளக்கிலா நடுநா டச்சன்
றுவட்டாநாள் சித்தி ரைப்பேர்
விளக்கொடு மரக்கால் வீழ்க்கை
வெருநுகங் காற்றி னாளே
கிளற்றிய காற்றுத் தீபங்
கேடிலாச் சோதி யேழ்பேர். 73

விசாகத்திற்கும், அநுடத்திற்கும் பெயர்

முற்றில்வை காசி காற்று
முந்துநாண் முறத்தி னோடு
வெற்றிசேர் சுளகு சேட்டை
விசாகநா ளிருமுப் பேரே
புற்றுளி பெண்ணை தேளே
போந்தைமித் திரநா ளாறுஞ்
சொற்றன ரனுட மென்று
சோர்விலா நூலோர் தாமே. 74

கேட்டைக்கும், மூலத்திற்கும் பெயர்

சேட்டையிந் திரனாள் வேதி
செந்தழ லெரியிவ் வைந்துங்
கேட்டைவல் லாரை யென்றுங்
கிளத்துப வளத்த நூலோர்
தேட்கடை குருகு கொக்குச்
சிலையுட னன்றி லானி
வீட்டிய வாசு நாளிவ்
வேழ்பெயர் மூல மென்பர். 75

பூராடம், உத்திராடம், திருவோணம் இவற்றின் பெயர்

உடைகுள முற்கு ளந்நீ
ருதித்தநாள் பூரா டப்பேர்
கடையினிற் குளமே யானி
கருதுவிச் சுவநா ளாடி
மிடையிலுத் திராட மென்ப
மேவிய வோண மாயோ
னடையுநா ளுலக்கை முக்கோல்
சிரவண மாகு நாற்பேர். 76

அவிட்டத்திற்கும், சதயத்திற்கும் பெயர்

மருவிய காகப் புள்ளு
வசுக்களுள் பறவை புள்ளு
விரவுமா வணிய விட்டம்
விடம்பிய நாம மைந்தாம்
பெருகிய செக்குச் சுண்டன்
பேசிய போரே குன்று
வருணனுள் சதய மைந்தும்
வகுத்தபே தொகுத்த தாமே. 77

பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி
இவற்றின் பெயர்

பொருவின்முற் கொழுங்கோ ளுழி
புரட்டையே பூரட் டாதி
முரசுபிற் கொழுங்கோன் மன்ன
னுத்திரட் டாதி முப்பே
ரிரவிநாள் கலமே தோணி
யேற்றமாந் தொழுவே நாவாய்
பெருகிய கடைநாள் சூலம்
பெருநாளெட் டிரேவ திப்பேர். 78

அருந்ததி, விண்மீன், நாழிகை, காலநுட்பம்
இவற்றின் பெயர்

வடமீனே காலி யென்ப
மற்றரிந் ததியின் பேரே
யுடுவேதா ரகையே பம்மே
யுற்கையே சுக்கை விண்மீன்
கடிகைநா ழிகையாங் கன்ன
விருத்தையு மதுவே காட்டிந்
துடிகலை விகலை முப்பேர்
சொல்லிய கால நுட்பம். 79

### காலத்திற்கும், நெடும்பொழுதிற்கும் பெயர்

வேளையே யமைசஞ் செவ்வி
யெல்லையே பொழுது பாணி
காலைகொள் பதமே போழ்து
காலப்பே ரீரைந் தாகுஞ்
சாலநீட் டித்த லோடு
சார்ந்தபா ணித்த றானு
நீலவுண் கண்ணாய் மற்று
நெடித்தலு நெடும்போழ் தென்ப. 80

### காலவிரைவு, மத்தியானம், ஓரை இவற்றின் பெயர்

ஒல்லையே யிறையே யுற்ற
சிறுவரை யுடனி லேசம்
வல்லைமாத் திரைகள் கால
விரைவின்பேர் வகுத்தி லாறு
நல்லநண் பகலே ரிச்சி
நடுப்பகன் மத்தி யான
மில்லுடன் பவனை மோரை
யிராசியு மதுவே யென்ப. 81

### இரவுக்கும், பகலுக்கும், நாளுக்கும் பெயர்

அல்லிபா வரியே கங்கு
லல்கல்யா மினிரே நத்த
மெல்லியோ டியாம மாலை
யிரசனி நிசியி ராவா
மெல்லொடு திவாப்ப கற்பே
ரெல்வையே திவசம் வைக
லல்கலே தினமே யெல்லை
யாகியம் பகலே நாளாம். 82

கருவரி யந்த காரங்
கச்சளந் தமத்து வாந்த
மிருளென்ப திமிர மோடு
துணங்கற லென்று மேற்கு
நெருநலு நென்ன லுந்தா
னிகழ்ந்துப முன்னை நாளை
பெருகிய பின்றை பிற்றை
பின்னையென் றியம்ப லாமே. 83

வைகறை, சந்திரிகை, வெய்யில், மாலை,

சாமம், பருவம் இவற்றின் பெயர்

புலரிவை கறையி னுமம்
விடியலும் போற்று மப்பேர்
நிலவுசந் திரிகை வெய்யி
னிகழ்ந்தவா தவமே யென்று
மிலகிய மாலை சாயஞ்
சந்தியாம் யாமஞ் சாம
மலைவறு பருவந் தானே
யானிய மிருது வாகும். 84

ஒருகலை, மாதம், சினிவாலி, குரு இவற்றின் பெயர்

திதியொடு பக்கந் தானே
யொருகலை தெரிக்கு மென்ப
மதியொடு திங்கள் செல்லின்
மாதமே பேத மில்லை
மதிதெரி கலையி ராவே
வருஞ்சினி வாலி நாம
மதிமறை கலையி ராவின்
வரும்பெயர் குருவென் றாமே. 85

பூரணைக்கும், அமாவாசைக்கும், முதற்பக்கம்
தொடங்கி மூன்று வட்டமாக வருகிற
ஐந்து பக்கங்களுக்கும் பெயர்

அந்தமா முவாவே பௌவம்
பூரணை யிருபே ராகு
மிந்துவோ டிரவி கூட்ட
மமாவாசை யிசையு மென்ப
நந்தைபத் திரையி னோடு
நாட்டிய சயையி ரித்தை
முந்துபூ ரணையாம் பக்க
முதற்றொட்டு மூன்று வட்டம். 86

ஆவணி முதல், இரண்டிரண்டு மாதமாகிய
அறுவகைப் பருவங்களின் பெயர்

பரவிய காரே கூதிர்
முன்பனிப் பனிக ளோடு
விரவிய விளைய வேனில்
விரைந்திடு முதிர்ந்த வேனின்
மருவுமா வணியே யாதி
மற்றிரண் டிரண்டு மாதம்
பருவமூ விரண்டு மாய்ந்து
பார்த்திடின் வாய்த்த பேராம். 87

வருடம், அயனம், ஊழிகாலம், வாழ்நாள்,
அயன்வாழ்நாள் இவற்றின் பெயர்

இகழ்விலவற் சரமே யாண்டே
சமைமுப்பேர் வருட மென்ப
பகரிலா யனமு மப்பே
ரயனமே யாண்டிற் பாதி
யுகமுடி வுடன்ம டங்க
லூழியா மாயுள் வாழ்நாள்

மகிழ்வுறு கற்பந் தானே
மலரயன் வாழ்நா ளென்ப. 88

மழைக்கும், பெருமழைக்கும், விடாமழைக்கும்பெயர்

சொரிதுளி திவலை தூவல்
சீகரந் தூறன் மாரி
வருடமே டுறையே யாலி
வானமு மழைப்பேர் பத்தாம்
பெருமழை யென்ப தானே
பேசிலா சார மாகும்
விரவிய பனிவல் சோனை
விடாமழை யிருபே ராமே. 89

துளி, ஆலங்கட்டி, மேல், கீழ் இவற்றின்பெயர்

வாலிய திவலை தூவல்
வண்சிதர் சீக ரத்தோ
டாலியே துளியே மிக்க
வுறைதுளி யாக வேழ்பே
ராலியே கரக மற்றைக்
கனோபல மாலங் கட்டி
மேலினு மத்தா னும்பர்
மேக்குமாங் கிழக்குக் கீழே. 90

மேகத்தின் பெயர்

பயனுறு மங்குல் சீதம்
பயோதரங் காபா தாரங்
குயின் மழை யெழிலி மஞ்சு
கொண்டல்சீ மூகங் கொண்மூ
வியன்முகில் விண்வி சும்பு
விளையுமால் சலதாஞ் செல்

புயல்கனங் கந்த ரங்கார்
போற்றுமை மாரி மேகம். 91

இடிக்கும், மின்னலுக்கும் பெயர்

வெடியொலி யசனி செல்லு
விண்ணேறு மடங்க லாறே
இடியின்பே ருருமு மற்றை
யனலேறு மிதன்பே ரென்ப
நெடியவித் துருத்த டித்து
நீள்சம்பை சபலை யோடு
கடியசஞ் சலையே மின்னல்
கனருசி மின்னி னேழ்பேர். 92

பனி, பரிவேடம், வானவில் இவற்றின் பெயர்

பனியிமந் துகிள மும்பேர்
பரிவேட மூர்கோள் வட்டந்
தனியிடு வான வில்லே
இந்திர தநுவென் றுரு
மினியவை தேவ ரீட்டச்
செய்யுணூற் றொன்றி சைத்தாள்
பனைகுண பத்தி ரன்றாள்
போற்றுமண் டலவன் றானே. 93

சூடாமணி நிகண்டு

முதலாவது

தெய்வப்பெயர்த் தொகுதி

முற்றிற்று.

---

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1934.